முற்பகல் 10–35

நமது தமிழகத்தில் தெரு விளக்குகள் மொத்தம் 43 இலட்சத்து 61 ஆயிரம் இருக்கின்றன. அதிலே கிட்டத்தட்ட 23 இலட்சத்து 63 ஆயிரம் விளக்குகள் இப்போது LED விளக்குகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அப்படி மாற்றியதால் மட்டும் ரூ.446 கோடி இதுவரையிலும் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரின் கருத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

***16592—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ் மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு காட்டுமன்னார்கோவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். காட்டுமன்னார்கோவிலிலிருந்து சுமார் 27 கிலோ மீட்டர் தொலைவில், சிதம்பரத்தில் ஒரு கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையமும், காட்டுமன்னார்கோவிலைச் சுற்றி 6 விற்பனை நிலையங்களும் இருக்கிற காரணத்தால் காட்டுமன்னார்கோவில்

2019 ஜூலை 2]

பேரூராட்சியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்கும் சூழ்நிலை இப்பொழுது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருளில் இருந்தோரை வெளிச்சத்திற்கு மாற்றிக் காட்டிய மெழுகுவர்த்தி, விரல் அசைவால் வரங்களை வாரி பொழிந்த கார்மேகம், ஆழ்ந்த ஞானத்தால், தாழ்ந்த தமிழகத்தை உயர்த்திக் காட்டிய உயர் கோபுரம், நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளைப் போற்றி முதற்கண் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

நீதியான செங்கோல், நேர்மையான மணிமகுடம், நிம்மதியான ஆட்சி, அதற்குக் காட்சியாகவும், சாட்சியாகவும் விளங்குகிற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன், ஓ.பி.எஸ். அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியோடு வணங்குகிறேன். திராவிட இயக்கத்தினுடைய தோரண வாயிலாகவும், ஊமைகளைப் பேச வைத்த பிருந்தாவனமாகவும், தென்னாட்டு காந்தியாகவும், இந்நாட்டு இங்கர்சாலாகவும் விளங்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், தன்னுடைய தோளிலே சுமந்து கைத்தறி ஆடைகளை விற்பனை செய்தார்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் பெயரில் இயக்கம் நடத்துகிற நாம், அம்மாவின் பெயரிலே பொற்கால ஆட்சியை நடத்துகிறோம் என்பதை இந்தப் பொன்னான வேளையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் பல்வேறு ஆண்டுகளுக்கு முன்பாக இயங்கி வந்தது. 2002–க்குப் பின்னால் அந்நிறுவனம் மூடப்பட்டிருக்கிறது. எனவே, இலாபத்தைக் கருத்தில் கொள்ளாமல், அண்ணாவின் இலட்சியங்களைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் பரிசீலனை செய்து நிறைவேற்றித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த அரசை தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை பரிவோடு, கனிவோடு பரிசீலித்து, தாராளமாக நிதி ஒதுக்கி திட்டங்களை மனமகிழ்ச்சியோடு தந்துகொண்டிருக்கிறார்கள். ஆனாலும், நம்முடைய காட்டுமன்னார்கோவில் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை என்பது நிறைவேற்றுவதற்குக் கடினமான ஒன்றாக இருக்கிறது. 1970 ஆம் ஆண்டு முதல் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அங்கே இயங்கி வந்திருக்கிறது. 2002 ஆம் ஆண்டில் கடுமையான நஷ்டம் ஏற்பட்டு, தொடர் நட்டம் ஏற்பட்ட காரணத்தால் மூடப்பட்டிருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, சரியான, போதுமான, விற்பனைக்கு உகந்த, விற்பனை நிலையத்திற்குச் சரியான இடம், கட்டடம் கிடைக்குமென்று சொன்னால், அது வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடலூர் மாவட்டம், ஒடுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையின மக்கள் நிறைந்திருக்கக்கூடிய ஒரு மாவட்டம். வளர்ந்து வருகின்ற மாவட்டம், மிகவும் பின்தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்திலேயுள்ள காட்டுமன்னார்கோவில் தொகுதியைப் பொறுத்தவரையிலே உடையார்குடியிலும், மாமங்கலத்திலும், புவனகிரி தொகுதியைப் பொறுத்தவரையில், புவனகிரியைச் சுற்றியிருக்கக்கூடிய பெருமாத்தூர், புவனகிரி போன்ற பகுதிகளிலும், குறிஞ்சிப்பாடி

2019 ஜூலை 2]

தொகுதியைப் பொறுத்தவரையில், குறிஞ்சிப்பாடி நகரம் மற்றும் அதனைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளிலும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அங்கிருக்கக்கூடிய ஏழையெளிய தொழிலாளர்கள் நலன் கருதி, இளைஞர்களுடைய நலன் கருதி, கடலூர் மாவட்டத்திற்கு ஒரு ஜவுளிப் பூங்காவை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. இதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு 40 சதவிகிதம் அல்லது ரூ.40 கோடி; மாநில அரசு 9 சதவிகிதம் அல்லது ரூ.9 கோடி; ஆகமொத்தம் 49 சதவிகித நிதியுதவியை மத்திய, மாநில அரசுகள் தருவதற்குத் தயாராக இருக்கின்றன. அங்கே இருக்கின்ற தொழில்முனைவோர்கள் 51 சதவிகித நிதியை ஏற்பாடு செய்ய முன்வர வேண்டும். கடனாகவோ, வங்கிக் கடனாகவோ அல்லது அவர்களுடைய மூலதனமாகவோ கொடுக்க வேண்டும். அதற்கு முன்வருகிறபோது, மாவட்ட ஆட்சியருடைய பரிந்துரையைப் பெற்று அரசு தாராளமாக பரிவோடு அதைச் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

அவசர கால ஊர்தி மற்றும் கட்டடம்

***8661—திரு. சு. புகழேந்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—